விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சுடர் 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 19 புதன்கிழமை (01.02.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 44

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# ரி.ஆர்.ஓ.பணியாளர்கள் கடத்தப்பட்டமை

# ஜெனீவா நேரடிப்பேச்சை பாதிக்கலாம்

## விடுதலைப்புலிகள் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஐந்து பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவமானது ஜெனீவாவில் அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு தடையாக அமையலாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர்.

பேச்சுவார்த்தை நடத்தப்படுவது நிறுத்தப்படும் என்பது அதன் கருத்தாகாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் நிலமையினை அதிகரிக்குமானால் பேச்சுவார்த்தை நடக்காமல் போகலாம் என புலித்தேவன் குறிப்பிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மேலும் ஐவரைக் காணவில்லை!

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மேலும் ஐந்து ஊழியர்களை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் ஐந்துபேரையே காணவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசிநாதர் கணேசலிங்கம்,எஸ்.டொசினி ,நடேஸ்வரி,சித்திரவேலு சிவமதி,ஓட்டுநர் ...ராசா ஆகியோர் வாகனத்துடன் காணவில்லை என்றும் இந்த வாகனம் அமெரிக் ...னர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

...நார்வே அகதிகள் சபையின் நிதியுதவியுடன் ஆழிப்பேரலை நலன்புரி நிலையங் ...உள்ள பகுதிகளில் முன்பள்ளிகளை அமைப்பதற்கான செயல்திட்டம் ...

## இரு பொலிஸாருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள இரு பொலிஸாரையும் எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்ரம்பர் 9ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான மன்னாரில் அனுமதியின்றி உள்நுழைந்தமைக்காக மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.அவர்கள் மீதான வழக்குவிசாரணைகள் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றில் நடை பெற்றுவந்தன. கடந்த 26 ஆம் திகதி ஒருவரை நல்லெண்ண முயற்சியாக



தமிழீழ விடுதலைப்புலிகள் விடுதலை செய்தனர். மற்றைய இருவரின் மீதான விசாரணைகள் கிளிநொச்சி நீதிமன்றில் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. (ச)

## கடத்தப்பட்டவர்களை மீட்க உதவுமாறு புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின். உறுப்பினர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசாங்கமும் சர்வதேச சமூகமும் இலங்கையில் உள்ள சமூக அமைப்புக்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் கடத்தப்பட்டவர்கள் பாதுகாப்பாக வந்து அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் இணைவதற்கும் ஆவன செய்யவேண்டும் எனவும் அவர்கள் கடத்திச்செல்லப்பட்டமையைக் கண்டிப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி தெரிவித்துள்ளார்.

இக் கடத்தல் விவகாரம் தொடர்பாக ஐ.நா. சபையில், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகளுக்கான அமைப்புக்கள் ,சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், பாராளுமன்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களின் போது

னர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.
நார்வே அகதிகள் சபையின் நிதியுதவியுடன் ஆழிப்பேரலை நலன்புரி நிலையங் உள்ள பகுதிகளில் முன்பள்ளிகளை அமைப்பதற்கான செயல்திட்ட கூட்டம் கிளி சியில் நேற்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் பங்கேற்க மட்டக்களப்பில் இருந்து பி வைக்கப்பட்ட எமது குழுவினர் கலந்து கொள்ளவில்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)

# டனடி விசாரணை நடத்துமாறு அமெரிக்க அரசு வலியுறுத்தல்

(கொழும்பு)

ழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணி ள் கடத்தப்பட்டது தொடர்பாக அரசாங் ரவான விசாரணைகளை நடத்த மென்று அமெரிக்கா வேண்டுகோள் ளது.

தொடர்பாக இலங்கைக்கான அமெ தரகம் நேற்று அறிக்கையொன்றை பிட்டுள்ளது.

ழர் புனர்வாழ்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்கள் பொலநறுவை மாவட் ன் வெலிகந்தைப் பகுதியில் கடத்தப்பட் டுள்ளதாக வெளியான செய்திகள் தொடர் பில் அமெரிக்கத்தூதரகம் வருத்தம்கொள் கிறது. இது தொடர்பாக தொடர்புடைய அதி காரிகள் விரைவான விசாரணை மேற் கொள்ளவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜெனீவாவில் யுத்த நிறுத்தப் பேச்சுக்கள் நடைபெறும் சூழ்நிலையில் அனைத்துத் தரப்பினரும் பொறுமையும் அமைதிகாக்க வேண்டும் என்றும் அமெரிக்கத் தூதுவரகம் மீண்டும் கேட்டுக்கொள்கிறது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம்!

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ் லிம்களின் பிரதிநிதித்துவத்திற்கு இடமளிக் கப்படுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

கௌரவமான சமாதானம் ஒன்றையே எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி எந்த வொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் மக்களுக்கு எதுவித அநீதியும் இழைக்கப்படாதவாறு செயற்பட்டிருப்பதாகவும் இதுபோன்று எதிர் காலத்திலும் தொடர்ந்து செயலாற்ற இருப் பதாகவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை அலரிமாளிகையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் பிர திநிதிகளை சந்தித்து உரையாடியபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச செய்தி ஸ்தாபன மான ஏ.எவ்.பிக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி தமிழீழ விடு தலைப்புலிகளுடனான சமாதான நடை முறையில் படிப்படியான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுமென தெரிவித்தார்.

இந்த மாதம் ஆரம்பமாகும் புதிய சுற் றுப்பேச்சுவார்த்தைகளில் யுத்தநிறுத்தத் தினை பலப்படுத்த (10 ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
நாளைய வலம்புரியுடன் அழகிய வர்ணக் கலண்டர் வெளிவரும். உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள் ளுங்கள்.
நிர்வாகம்

EXPOAIR
your friend in the skies...
ஓதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனமுறுகலை ஏற்படுத்த விஷமிகள் முயற்சி

# பேருவளை பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

சமீபகாலத்தில் பேருவளையில் இரு இனங்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலையைப் பயன்படுத்தி தனது கடைக்குத் தானாகவே சேதத்தை ஏற்படுத்திக் கொண்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வியாபாரியொருவரும், தமது முச்சக்கர வண்டிகளுக்குத் தாமே தீயிட்டுக் கொழுத்திவிட்டு அதனை மற்றைய இனத்தின் மீது சுமத்த முற்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதியொருவரும் பேருவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மது போதையிலிருந்த குறித்த வியாபாரி தனது கடையைச் சேதப்படுத்திவிட்டு அதன் பழியை மற்றச் சமூகத்தினர் மீது சுமத்த எத்தனித்துள்ளார். எனினும் பேருவளை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இவரது நாடகம் அம்பலமாகியுள்ளது.

இனமோதலை ஏற்படுத்தும் விதமாகச் செயற்பட்ட மேற்படி நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 8 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இந்த இன முறுகலைச் சாதகமாகப் பயன்படுத்தி தனது முச்சக்கர வண்டியை தீயிட்டுக் கொழுத்திவிட்டு நஷ்டஈடு பெறுவதற்குக் குறுக்கு வழியில் முயற்சித்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இவர் தனது முச்சக்கர வண்டியைத் தானே தீயிட்டுக் கொழுத்திவிட்டு மற்றச் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அதனைச் செய்ததாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் சற்றே பதற்றம் நிலவிய போதிலும் உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த நபரையும் அவரது மனைவியையும் விசாரணை செய்த போது உண்மை அம்பலத்துக்கு வந்தது.

இப்பகுதியில் நிலவிய இன முறுகலைப் பயன்படுத்தி நஷ்டஈடு பெற்றுக் கொள்வதற்காகவே குறித்த நபர் அவரது முச்சக்கர வண்டிக்குத் தீ மூட்டியதாகப் பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்ஜீலபண்டார தெரிவித்துள்ளார்.

சொந்த நலன்களுக்காக இனங்களிடையே குழப்ப நிலையைத் தோற்றுவிக்க முனையும் விஷமிகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (து)

## மீனவர்களின் வலையில் சிக்கிய இராட்சத மீன்

30 அடி நீளமும் எட்டு அடி அகலமும் கொண்ட சுறா மீன் ஒன்று நீர்கொழும்பு மீனவர்களின் வலையில் சிக்கியதையடுத்து அது கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வலையில் சிக்கிய இந்த இராட்சத சுறாமீன் வாயின் அகலம் 3 அடியாகும்.

இந்த சுறா மீனை ஆழமான கடற்பகுதியில் கொண்டு சென்று விடுவதற்கு மீனவர்களும் பிரதேசவாசிகளும் முயன்ற போதிலும் அது பயன் அளிக்காமையினால் 6 மணி நேரத்தின் பின் இறந்து போயுள்ளது. (க-2)

# சுதந்திர தின விழாவில் மக்களும் பங்குபற்றலாம்

(கொழும்பு)

சுதந்திர தின தேசிய விழாவில் பொது மக்களுக்கு பகிரங்கமாக கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த 15 வருடகாலமாக பலதரப்பட்ட காரணங்களால் சுதந்திர தின தேசிய விழாவில் பொதுமக்களுக்கு கலந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லையென அரச நிர்வாகப் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

இம்முறை பெரும் எண்ணிகையிலான மக்கள் இவ் விழாவைக் கண்டுகளிக்க சமுகமளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வருகை தரும் மக்களின் வசதி கருதி போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் கூறினார். (க-7)

# நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு மருந்தேற்றல்

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளோர் தமது வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பு மருந்தை ஏற்றுமாறு பிரதேசசபை உபஅலுவலகப் பொறுப்பதிகாரி தி.தவராஜா கேட்டுள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கு மருந்தேற்றும் இடங்களின் விபரம் வருமாறு;

இன்று மு.ப8.00-9.00மணிவரை தாவடிச்சந்தி- கே.கே.எஸ் வீதி, 9.05-10.05 மணிவரை தாவடிச்சந்தியில் இருந்து கோண்டாவில் பக்கமாக முதலாம்ஒழுங்கை,10.10-11.10மணி வரை ஆசாரியார் ஒழுங்கை, 11.15-பி.ப 12.15மணிவரை யாழ்.மருந்தகம் அமைந்துள்ள கையொழுங்கை, உப்புமடம் கே.கே.எஸ் வீதி, 2.00-3.00 மணிவரை டெனிஸ் ஐஸ்கிறீம் நிறுவனம் அமைந்துள்ள ஒழுங்கை, 3.05-4.05 மணிவரை வேதபாராயணம் சனசமூகநிலையம் கே.கே.எஸ்வீதி,

மு.ப8.00-9.00 மணிவரை காளிகோவில் ஒழுங்கை-விக்னேஸ்வராப்பாலர் பாடசாலை, 9.05-10.05 மணிவரை இருபாலை வீதி-கலட்டிஒழுங்கை ஆரம்பிக்கும் இடத்தில்,10.10-11.10மணி வரை இருபாலை வீதி காளிகோவில், 11.15-பி.ப12.15மணிவரை பாடசாலை ஒழுங்கைக்கு எதிராகவுள்ள ஒழுங்கை, 2.00-3.00 மணிவரை கோவில் வீதி (கோண்டாவில் ஸ்ரேசன்); 3.05-4.05 மணிவரை கோண்டாவில்- இந்து மகாவித்தியாலயம்,

மு.ப 8.00-9.00மணிவரை கோண்டாவில்ஸ்ரேசன் வீதி முதலாம் ஒழுங்கை, 9.05-10.05 மணிவரை குளக்கரை ஒழுங்கையும் இருபாலை வீதியும் இணையும் இடத்தில்,10.10-11.10மணி வரை குளக்கரை -வீதி-ஜெயந்திரன் வீட்டிற்கு அருகாமையில்,11.15-பி.ப 12.15 மணிவரை ஸ்ரேசன் வீதி-3ஆம் கை ஒழுங்கை, 2.00-3.00மணிவரை ஸ்ரேசன்வீதி-சமுர்த்தி உத்தியோகஸ்தர் வீட்டில், 3.05-4.05மணிவரை ஸ்ரேசன் வீதி-மிருககால்நடை உப அலுவலகம் கோண்டாவில்,

மு.ப8.00-9.00 மணிவரை செருக்கபுறம் ஒழுங்கை-செந்தில் கடைக்கு அருகாமையில்,9.05-10.05மணி வரை செருக்கபுறம்ஒழுங்கை,10.10-11.10 மணிவரை செருக்கபுறம்ஒழுங்கையும்-பொற்பதி வீதியும் சந்திக்கும் இடத்தில்,11.15-பி.ப12.15மணிவரை பாற்பண்ணைவீதி-உபதபால்கந்தோர்வீதிக்கு அருகில்,2.00-3.00மணி வரை இருபாலை வீதி-2ஆம் வலப்பக்க கையொழுங்கை,3.05-4.05 மணிவரை இருபாலை வீதி 2ஆம் வலப்பக்க கையொழுங்கை காளிகோவில்,

மு.ப 8.00-9.00 மணிவரை இருபாலை வீதி குவேந்திரநாதன் வீட்டிற்கு அருகில்,9.05-10.05 மணிவரை செல்வநாயகம் வீதி,10.10-11.05 மணி வரை இருபாலை வீதி அற்புத விநாயக சனசமூக நிலையம், 11.10-பி.ப12.10 மணி வரை பலாலி வீதி,2.00-3.00 மணி வரை ஏஸ்.கே.ஜிம் இருபாலை வீதி, 3.05-4.05 மணிவரை இருபாலை வீதி பழனிஆண்டவர் கோவில். (க)

# சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய தேசிய அபிவிருத்தித் திட்டம்

சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக புதிய தேசிய அபிவிருத்தித் திட்டமொன்றை முன்வைக்கவுள்ளதாக விவசாய சுற்றாடல் நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அனைத்து அரசாங்க அதிகாரிகள், தொண்டர் நிறுவனங்களை ஒருங்கிணைத்து தேசிய அமைப்பொன்றை உருவாக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலநறுவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஓசோன் படலத்தைப் பாதிப்படை[illegible]ச் செய்யும் பொருட்களைப் பாவனை[illegible]ல் இருந்து விலக்குவதற்கும் ஏனைய சு[illegible]றாடல் பாதிப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தவுமே இந்தக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. (க-7)

# கலைமாணிப் பட்டம் பெறும் 2 ஆவது தொகுதி மாணவர்கள்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி (2001) பட்டப் பரீட்சையில் சித்தி பெற்று பட்டம் பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தயானந்தன் நகுலேஸ்வரி, நாகராஜா நாவேந்தன், நவரட்ணம் தவச்செல்வி, ரட்ணராஜா ராஜ்கரன், கனகசீபாபதி சந்திரமௌலீசன், கணபதிப்பிள்ளை ஜெயசோதி, மார்க்கண்டு சர்பானந்தன், தியாகராஜா திருச்செல்வி, சிவப்பிரகாசம் பானுகோபன், மேரி ரேரிகா, நோயல் நெரியே, சிவசுந்தரம் சுதாயினி, நாகராஜா சியாமளா, செல்லப்பா செல்வராணி.

வாமதேவன் சொரூபகாந்தி, கௌரிதுரைராஜா, ராஜேந்திரம் தர்மினி, நற்குணராஜா அகிலன், கந்தசாமி ஆனந்தி, அருளானந்தம் ஞானசுலோஜனா, கிருஷ்ணபிள்ளை நந்தினி, சிவலிங்கநாதன் நெடுஞ்சேரலாதன், நவரட்ணம் ரமணி, சந்திரன் சரளா, தர்மகுலசிங்கம் சசிகலா, உமாபதி சசிதரா, கதிர்காமலிங்கம் சிவகுமரன்.

சிவஞானம் சிறிஞானேஸ்வரன், ராஜேந்திரம் செஜோலியன் சுகந்தராஜ், கங்காதரன் திருமகள், கனகசபாபதி வனிதா, அண்ணாச்சாமி ஜசோதா, பதுவைநாயகம் அன்ரன் கிருபைநாயகம், பசுபதி பாலமுரளிதரன், நாகராஜா பிரபாகரன், குமாரசாமி பாலமுருகன், தேவராஜா பிரதீபன், திருச்செல்வி சிறிவிஜயன்.

அந்தோனிப்பிள்ளை யூட்புனிதராஜா, றேணுகா கணேசலிங்கம், கிரேஸ் வசந்தி பாலராஜா, பொன்னுத்துரை பாலகி, எழிலோவியம் இளங்குமரன், ஞானசேகரம் ஞானச்செல்வி, சிவப்பிரகாசம் கோதை, நடராஜா லதா.

வேலாயுதம் அருட்செல்வம், சுந்தரலிங்கம் சாந்தினி, செல்லையா சங்கீதா, சூசைப்பிள்ளை நோபியோட் உதயகுமார், பௌசில கனியா பஞ்சலிங்கம், விஸ்வரட்ணம் சுதாகரன், பீக்மன்ஸ் சுஜிதா, வைரமுத்து அட்சயலிங்கம் அட்சயகுமார், சோமசுந்தரம் சுரேஷ்குமார், ஆறுமுகம் சுபாஸ்கரன். (க-132, 133)

# மதுபானத் திணைக்களத்துக்கு தண்டப் பணம் மூலம் ஒன்றரை கோடி ரூபா வருமானம் கிடைக்கிறதாம்

இலங்கை மதுவரித் திணைக்களம் கடந்த ஆண்டில் சட்டவிரோத மதுபானம், போதைப்பொருள் என்பனவற்றைக் கண்டுபிடித்ததன் மூலம் ஒரு கோடியே 45 இலட்சம் ரூபாவைத் தண்டப்பணமாகப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு சுமார் 2 ஆயிரத்து 300 திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து மேற்படி தொகை தண்டப்பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதாக மதுவரித் திணைக்கள பிரதம பரிசோதகர் பிரபாத் விஜேசிங்கா தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கைகள் மூலமாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 17 வாகனங்கள் மற்றும் இரண்டு படகுகளும் மற்றும் பெருமளவு போதைப்பொருட்கள், சிகரட்டுகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (து)

# திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்காமையால் மக்கள் சிரமம்

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்படாததால் அவ்வூர் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்துள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகள் வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்து வசித்து வந்தபோது நோய் வாய்ப்புற்று இறந்துள்ளனர்.

இதன் காரணமாக தங்கள் தேவைகளை நிறைவேற்ற வேலணை, ஊ[illegible]வற்துறை போன்ற பிரதேசங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதென அவ்வூர் பொ[illegible]மகன் ஒருவர் தெரிவித்துள்ளார். இவ் வி[illegible]யத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அ[illegible] கவனமெடுத்து திடீர் மரண விசாரணை [illegible]காரி ஒருவரை நியமிக்குமாறு அவ்வூர் [illegible]கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். [illegible]

## ‘ஆகாஷ் ஏவுகணை’ சோதனை வெற்றிகரமாக முடிந்ததாம்

ஒரிஷா மாநிலம் பலசூரில் இருந்து 15கி.மீ தொலைவிலுள்ள சந்திப்பூர் அருகே நடமாடும் ஏவு தளத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

ஆளில்லா விமானத்துடன் இணைக்கப்பட்டிருந்த அசையும் இலக்கு ஒன்றை இது குறி பிசகாமல் தாக்கவல்லது.

5.6 மீற்றர் நீளம் கொண்ட அதிக பருமன் இல்லாத இந்த ஏவுகணை 25 கிலோ மீற்றர் தொலைவு தூரத்திலுள்ள இலக்கை தாக்கவல்லது. இவ் ஏவுகணையை விமானப்படை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (க-2)

# நோயாளர்களின் அவசர தேவைகளுக்கான — அம்புலன்ஸ் சேவை பெறும் நடைமுறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசரமானதும், அகாலமானதுமான தேவைகளுக்காக அம்புலன்ஸ் சேவையைப் பெறுவது தொடர்பான நடைமுறைகளை குறிப்பிட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவசரமான அழைப்புக்கு அம்புலன்ஸ் வழங்குவது தொடர்பாக அனுப்பிய செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அவசர அழைப்புக்களின் பேரில் அம்புலன்ஸ் வண்டிகளை பொதுமக்கள் பாவனைக்கு கோருவது சம்பந்தமாக குடாநாட்டின் பத்திரிகைகளில் வெளியான செய்திக் குறிப்புக்கள் சம்பந்தமாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் என்ற வகையில், யதார்த்தபூர்வமான நிலையினை விளக்கவேண்டியது எனது கடமையாகின்றது.

இரவு வேளைகளில் அகாலமானதும், அவசரமானதுமான சந்தர்ப்பங்களில் மட்டும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து விதிவிலக்காக அழைப்புக்கள் கிடைக்கப்பெறும் போது பின்வரும் அடிப்படைகளில், இரவுக் கடமையில் இருக்கும் சிரேஷ்ட வைத்தியரினால் அம்புலன்ஸ் வண்டியினை அனுப்புவதா என்பது தீர்மானிக்கப்படும்.

*அகாலமானதும், அவசரபூர்வமானதாகவும் இருத்தல் வேண்டும். சாதாரண போக்குவரத்து சேவைகளை பயன்படுத்த முடியாத சந்தர்ப்பமாக இருத்தல் முக்கியமானது.

*மேற்கூறிய நிலைமைகளின் அடிப்படையில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இருந்து கிடைக்கும் அழைப்புக்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.

*அழைப்புக்களின் நம்பகத்தன்மை கடமையில் உள்ள சிரேஷ்ட வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே தீர்மானிக்கப்படும்.

*அம்புலன்ஸ் அழைப்புக்கள் மேற்கூறிய அடிப்படைகளில் கோரப்படும் போது வைத்தியசாலையின் அவசர தேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் சாத்தியப்படும் போது மட்டுமே மேற்படி பாவனைக்கு விடப்படும்.

*இவ்வாறான சேவை ஒழுங்கானது. இற்றைவரை நடைமுறையில் அல்லாததும், எங்களிடம் உள்ள பணியாளர் வண்டிகள், சாரதிகள், ஆளணி வளங்களைக் கொண்டு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாததுமாகும் என்பதனை பொதுமக்களின் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

*மனிதாபிமான அடிப்படையிலேயே மேற்படி அம்சங்களுக்கு அமைவாக இச் சேவை கருத்தில் கொள்ளப்பட்டது என்றுள்ளது.(கு)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாவது வகுப்புக்கு, பொது ஊழியர் மற்றும் விசேட ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

போட்டிப் பரீட்சையில் கலந்துகொள்ள தகுதியானவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## விரிவுரையாளர்களாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறையில் போதனாசிரியர்களாகப் பணியாற்றியவர்களில் 5பேர் சேவை, மூப்பு, கல்வித் தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த வருடம் மே மாதம் 2ஆம் திகதி முதல் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்ட 5பேரினதும் பெயர்கள் வருமாறு,

திருமதி சண்முகயோகினி இரவிந்திரன், வைரமுத்து சுந்தரேசன், மகேஸ்வரக் குருக்கள் சரவணபவஐயர் இவர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 (SL II) ற்கும் திருமதி சாந்தி விக்கினராஜா, சோமசுந்தரம் ஸ்ரீ கதிர்காமநாதன் இவர்கள் இருவரும் விரிவுரையாளர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர். (கு)

## குருபூசையும் திருவாசக விழாவும்

(பருத்தித்துறை)

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 18ஆவது குருபூசையும் திருவாசக விழாவும் எதிர்வரும் 12ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அறப்பணியில் முன்னணியில் திகழும் தொண்டமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம பீடாதிபதி சுவாமி மோகனதாஸின் சேவைகள் பாராட்டப்பட்டு அவர் கௌரவிக்கப்படவுள்ளார்.

'திருவாசகமும் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளும்' பற்றி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இலங்கைக் கம்பன்கழக கம்பவாருதி இ.ஜெயராஜ் தொகுப்புரை நிகழ்த்துவார். (க-52)

## காலிச் சிறையிலிருந்த கைதி தற்கொலை

(கொழும்பு)

காலிச் சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிக்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞனே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு இவர் கடந்த சனிக்கிழமை சிறையில் அடைக்கப்பட்டார். (க-9)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை பதிவு செய்யக் கோரிக்கை

(சுண்டிக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் வழமைபோல் இவ்வருடமும் அதில் அங்கம் வகிக்கும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை மீண்டும் பதிவு செய்யவுள்ளது.

எனவே தங்கள் பெயர்களை பதிவுசெய்ய விரும்பும் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் தமது விண்ணப்பங்களை அதன் தலைவர் கப்ரன் டி.ஏ.எம்.குணசிங்கத்திடம் பெற்று உரியமுறையில் நிரப்பப்பட்ட படிவங்களை அவரிடம் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுப்பணம் 100 ரூபாவுடன் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்தியஸ்தர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்று சமாசத்தினால் வலியுறுத்தப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ளவும். (க-110)

## அரச திணைக்களங்களுக்கு

# தனியார் நிறுவனங்கள் ஊடாக ஊழியர்களை சேர்ப்பது நிறுத்தம்

(கொழும்பு)

அரசாங்கத் திணைக்களங்களுக்கு தனியார் நிறுவனங்களூடாக ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதை முற்றாக நிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ- சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் நேற்று முன்தினம் உத்தரவிட்டதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

ஏற்கனவே அரசாங்கத் திணைக்களங்களில் தனியார் நிறுவனங்களூடாக இணைத்துக்கொள்ளப்பட்ட பெரும் எண்ணிக்கையிலானோர் சேவையாற்றி வருகின்றனர்.

அவர்களில் பெரும்பாலானோர் சாரதிகளும், சிற்றூழியர்களும் ஆவர்.

குறிப்பிட்ட ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்ற போதிலும், அந்த ஒப்பந்தங்களை தனியார் நிறுவனங்களே மேற்கொண்டுள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-7)

# நிவாரணப் பொருட்களை கொள்ளையடித்தோர் கைது

காத்தான்குடியில் ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை கொள்ளையடித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அந்த தேவாலயத்தின் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் ரூ.25 ஆயிரம் மதிப்பிலான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட காத்தான்குடி பொலிஸார் மூவரை கைதுசெய்து மட்டக்களப்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றினர். (து)

## சிவராத்திரி விழா

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சிவராத்திரி விழாவை விமர்சையாக கொண்டாடவுள்ளது.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் க.திவாகரன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவிகளின் பண்ணிசைக் கச்சேரி, இராமநாதன் கல்லூரி மாணவிகளின் குழு நடனம், காசிமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை மற்றும் நாடகம், இணுவில் இந்து இளைஞர் தொண்டர் சபையின் நாடகம் என்பன இடம் பெறவுள்ளன. (க-132, 133)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு த.புனர்வாழ்வுக்கழகம் உதவி

(மந்துவில்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து மழை, வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த 450க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளை வழங்கி வருகிறது.

முழங்காவில், நாச்சிக்குடா, குமுழமுனை, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பாலாவி, பள்ளிக்குடா போன்ற இடங்களில் - பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளவர்களுக்கே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்காலிக வீடுகள், முகாம்கள் என்பவற்றை அமைத்துக் கொடுத்து உதவி வருகிறது.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள 80 குடும்பங்களுக்கு உலர் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களான அரிக்கன் லாம்பு, பாய் என்பவற்றையும் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி அவர்களுக்கு பௌசர் மூலம் குடிநீர் விநியோகத்தையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-102)

## விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

தீவகம் சுருவில் பகுதியில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த வேலணை இளைஞர்களை மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி ஊர்காவற்றுறை நீதவான் பாலசுப்ரமணியம் உத்தரவிட்டுள்ளார். (து-72)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 04

மாணவர் முழுப்பெயர் : ........................................

பாடசாலையின் பெயர் : ........................................

வீட்டின் முகவரி : ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 08.02.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 04
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

## இன்று ஒரு தகவல்

# படிப்பு

"அறிவுத் தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உருவாக்கி விடுகிறது" என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார்.

அதனால் ஏட்டுப்படிப்பும் வேண்டும். அனுபவப் படிப்பும் வேண்டும். இவை இரண்டும் இருந்தால்தான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமாக ஓடும்.

இன்று படிப்பதற்குத் துணையாக நிற்பவை புத்தகங்கள். பள்ளிக்கூடத்தில் சரியாகப் படிக்காவிட்டால் தலையில் இருப்பது மூளையா? களி மண்ணா? என்று கேட்பது வழக்கம். ஆனால் முதல் புத்தகமே களிமண்ணாகத்தான் இருந்தது என்பதை நினைத்து ஆறுதல் அடையலாம்.

ஆமாம்! புத்தகங்கள் முதலில் களிமண் சுவடியாகத்தான் ஆரம்பித்தன. எங்கே? மொசப்பத்தேமியாவில்! களிமண்ணில்தான் எழுத்துக்களைப் பதித்தார்கள். அதன் பின்பு கட்டையில் பதித்தார்கள்.

பின்பு கல்லில் பதித்தார்கள். இப்போது அச்சாகவே பேப்பரில் பதிக்க ஆரம்பித்து விட்டோம். பேப்பரில் பதிப்பவை எல்லாம் நெஞ்சில் பதிகிறதா என்பதுதான் கேள்வி.

அது இருக்கட்டும். களிமண் படிவத்தில் பெரிய காப்பியங்களைக் கூடப் பதிவுசெய்து வைத்திருந்தார்களாம். பேப்பரில எழுதும் பழக்கம் எகிப்தில் ஆரம்பமானது. Cyprus papyrus என்று ஒரு செடி.

அதிலிருந்து papyrus செய்து அதில் எழுதினார்கள். இது வெளிநாடுகளுக்குக் கூட ஏற்றுமதி ஆனது.

ஒருமுறை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக்கொண்டு இந்த ஏற்றுமதியை நிறுத்தி விட்டார். உடனே அந்த நாட்டு மன்னர் யோசித்தார்.

தோலில் எழுத ஆரம்பித்துவிட்டார். கால்நடைகளின் தோல் இதற்கு உபயோகப்பட்டது. இன்று நாம் வலது பக்கமாக ஆரம்பித்து இடதுபக்கமாக படித்துக்கொண்டு போகிறோம் அல்லவா? 14 ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் தான் இதற்கு வழிகாட்டினார்கள்.

15ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியர் ஒருவர்தான் அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இன்று நிறையப் புத்தகங்களை அச்சடித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் படிக்கிறார்களா? இல்லையா? என்பது பற்றிக் கவலைப் படாமல் அச்சடிக்கிறோம்.

Bacon என்ன சொல்கிறார் தெரியுமா? "சில புத்தகத்தை சுவைக்க வேண்டுமாம். சிலதை விழுங்கிவிடவேண்டுமாம். சிலதை ஜீரணம் செய்து விடவேண்டுமாம்". இப்படிச் சொன்னால் அதை அப்படியே அர்த்தம் செய்து கொண்டு ருசி பார்க்க ஆரம்பித்துவிடக்கூடாது.

அவர் புத்தகம் என்று சொன்னால் அதில் கூறப்பட்ட கருத்தை சுவைக்க வேண்டும் என்று அர்த்தம். படிப்பது வேறு சுவைப்பது வேறு.

படிக்க வேண்டிய சில இருக்கிறது. பார்க்க வேண்டிய சில இருக்கிறது. கற்கவேண்டிய சில இருக்கிறது. திருக்குறளைக் கற்றேன் என்று கூற வேண்டும். திருக்குறளைப் பார்த்தேன் என்று சொல்லக்கூடாது.

ஏதோ புரட்டிப் பார்த்து விட்டு தூக்கிப்போட்டது போல் ஆகிவிடும்.

தினசரிப் பத்திரிகை வாங்குகிறோம். பேப்பர் பார்த்தேன் என்று சொல்கிறோம். இன்று பேப்பர் வாங்கிக் கற்றேன் என்றா சொல்வது? நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு கூட யாராவது இறந்தால் அவர்கள் படிப்பார்கள் என்ற நம்பிக்கையில் சில புத்தகங்களையும் சேர்த்து புதைப்பது சில நாடுகளில் வழக்கமாக இருந்தது.

நமது ஊரிலும் சிலர் செத்தால் புத்தகம் வைத்துப் புதைத்தால் பரவாயில்லை போலிருக்கும். இருந்தவரைதான் எதையும் படிக்கவில்லை.

இனியாவது படி என்று சொல்வதுபோல. இவ்வளவும் ஏன் சொல்கிறேன் என்றால் படிப்பு மிகவும் முக்கியம் என்பதைக் கூறத்தான். படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்குப் பரீட்சை நெருங்குகிறது நன்றாகப் படியுங்கள்.

பரீட்சை வருகிறது என்றால் சிலர் அடுத்தவர்களை நம்பி இருப்பதும் உண்டு.

அது மிகவும் தவறு. ஒருவர் அப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம் சொன்னார் "சார்! பரீட்சை வருகிறது. உங்கள் மகனை நன்கு படிக்கச் சொல்லுங்கள்" என்றார்.

"என் மகன் மீது உங்களுக்கு அவ்வளவு அக்கறையா?" என்றார் அவர். "அதற்கில்லை சார். உங்கள் மகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துதான் என் மகன் பரீட்சை எழுதுவான் அதனால் சொன்னேன்" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கடவுச்சீட்டின் பாவனைக் காலம் 10 ஆண்டாக நீடிப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தின் கடவுச் சீட்டினது பாவனைக் காலம் 10 ஆண்டுகாலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கென கூடுதல் கட்டணங்கள் எதுவும் கோரப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கடவுச்சீட்டுக்களினது பாவனைக் காலம் 5 ஆண்டுகளாக இருந்து வந்தது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.பி.அபயக்கோன் இது தொடர்பில் கருத்துக் கூறுகையில்,

பத்துவயதுக்கு கீழேயுள்ள சிறார்களுக்கான கடவுச்சீட்டினை ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் புதுப்பிக்க வேண்டும். 5 வயதுக்குக்கீழே உள்ளோருக்கான கடவுச்சீட்டை 2 ஆண்டுகளுக்குப் பின்னர் புதுப்பிக்க வேண்டும்.

அமைதிக்கான நீதிபதி, மூத்த அரச அதிகாரிகள், படையினர், சட்டத்தரணிகளே கடவுச்சீட்டின் விண்ணப்பங்களில் தெரிவத்தாட்சிக் கையொப்பமிட்டு வந்தனர்.

தற்போது கிராம சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், அஞ்சல் உத்தியோகத்தர்கள், தோட்ட கண்காணிப்பாளர்கள் ஆகியோரும் தெரிவத்தாட்சி கையெழுத்திடலாம்.

கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களை அஞ்சலகங்கள் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகத்திலும் கிடைக்கும். அனுராதபுரம், மாத்தறை, கண்டி ஆகிய பிரதேசங்களில் அடுத்த மாதம் பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்படும்.

இலங்கையில் கடவுச்சீட்டுக்காலம் முடிந்தும் தங்கியிருக்கக் கூடிய நூற்றுக்கணக்கான வெளிநாட்டினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாத்தறை, ஹிக்கடுவ, அருகம்பே பகுதிகளில் கடவுச் சீட்டுக்காலம் முடிந்தும் தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றார். (து)

## கொரிய நாட்டு வர்த்தகர்குழு ஏப்ரலில் இலங்கை வரும்!

(கொழும்பு)

இலங்கைக்கும் தென்கொரியாவுக்குமிடையிலான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து இலங்கை வர்த்தக சபை கவனம் செலுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கொரிய ஏற்றுமதியாளர்கள் மற்றும்வர்த்தகர் குழு ஒன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கை வரவுள்ளதாக இலங்கை வர்த்தக சபை தெரிவித்துள்ளது.

இங்குவரும் அந்தக்குழுவினர் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்கள். கொரியாவுக்கு இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும்பொருட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் இந்தபேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# அம்பாந்தோட்டை நிதி மோசடி வழக்கில் சட்டத்தை மீறினராம் பொலிஸார்

## தலைமை நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதான அம்பாந்தோட்ட ஆழிப்பேரலை நிதி மோசடி வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் குற்றவியல் சட்டத்தை மீறிச் செயல்பட்டுள்ளனர் என்று தலைமை நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தம் மீதான அம்பாந்தோட்ட ஆழிப்பேரலை நிதி மோசடி வழக்கை எதிர்த்து மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்றில் முறையீட்டு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி சரத் என்.டி. சில்வா, நீதிபதிகள் சிரானி திலகவர்த்தன, என்.இ.திஸ நாயக்க ஆகியோர் அடங்கிய குழு முன்னிலை யில் விசாரணைக்கு வந்தது. மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எதிராக எதுவித எழுத்து பூர்வமான சாட்சிய மும் இல்லாத நிலையில் அரசியல் அழுத்தங்களுக் கமைய பொலிஸார் செயற்பட்டிருப்பதாக நீதித் துறை யினர் தெரிவித்தனர்.

மேலும் அம்பாந்தோட்ட நிதி மோசடி வழக்கின் மீதான உத்தரவு நிறுத்தி வைக்கப்படுவதாகவும் நீதிமன்றம் தெரிவித்தது. (து)

## சிரார்த்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 58ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் சிறப்புற அனுட்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள அடிகளாரின் சிலைக்கு காலை 10.30 மணியளவில் மில்க்வைற் அதிபர் இ.தவகோபால், ஓய்வுபெற்ற அதிபர் ஆ.வடிவேலு, சங்கத்தின் செயலாளர் க. இராசரத்தினம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க. செல்வக்குமாரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து காந்தீய அபிமானிகளும் பொது மக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

முதாலம் குறுக்குத்தெருவிலுள்ள சங்க அலுவலகத்தில் சங்கத்தின் உபதலைவர் அ.இராமநாதன்தலைமையில் இந் நினைவுக்கூட்டம் இடம்பெற்றது. (க)

## முக்கிய கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றச் செயலாளர் கேட்டுள்ளார். (க-7)

## எஸ்.பி.திஸநாயக்காவின் பாராளுமன்ற ஆசனத்திற்கு ரேணுகா ஹேரத் நியமனம்

ஐக்கிய தேசியக கட்சியின் எஸ்.பி.திஸநாயக்காவின் பாராளுமன்ற ஆசனத்துக்கு ரேணுகா ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வெளியிட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எஸ்.பி. திஸநாயக்க சிறையில் இருப்பதால் பாராளுமன்ற அமர்வுகளில் அவர் கலந்து கொள்ளவில்லை. பாராளுமன்றக் கூட்டங்களில் 3 மாதங்களுக்கு மேல் தொடர்ந்து பங்கேற்காததால் எஸ்.பி. திஸநாயக்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளார்.

இதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ரேணுகா ஹேரத் அந்த ஆசனத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு வலபனெ தொகுதியில் போட்டியிட்டு ரேணுகா ஹேரத் வெற்றி பெற்றார். 1989ஆம் ஆண்டுமுதல் 1994ஆம் ஆண்டுவரை சுகாதாரம் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான அமைச்சராகவும் ரேணுகா ஹேரத் பணியாற்றினார். (து)

## நடிப்புப்பயிற்சி

(கிளிநொச்சி)

நிதர்சனம் நிறுவனம் தயாரிக்கவுள்ள திரைப் படத்தில் நடிப்பதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கான நடிப்புப் பயிற்சி நாளையும் நாளை மறுதினமும் காலை 10 மணிக்கு கிளிநொச்சி- திருநகரில் அமைந்துள்ள நிதர்சனம் நிறுவனத்தில் நடை பெறவுள்ளது.

நிதர்சன நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கல் பிரிவுக்கு ஆர்வமுள்ளவர்களை நேரில் வருமாறு இந் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகளை தாயகத்தின் சிறந்த இயக்குநர் வழங்கவுள்ளதாகத்தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-7)

## போலி ஆவணங்களை வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட பல உத்தியோகத்தர்களின் போலி சிபார்சுகள் மற்றும் அடையாள அட்டைகள் போன்ற பல ஆவணங்களை வைத்திருந்த நபர் ஒருவரை தென் மாகாண குற்றப் புலனாய்வு பிரிவு கைது செய்துள்ளது.

இவர் மாத்தறை, எம்பிலிப்பிட்டியவில் வசிப்பவர் என்றும் இந்த நபர் பிரதம மந்திரியின் ஊடகப் பிரிவில் தாம் ஒரு படப்பிடிப்பாளர் என்று பலரையும் நம்ப வைத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (க-7)

# கண்காணிப்புக்குழுவுக்கு இனிமேல் தான் பாரிய பொறுப்பு

## க.கா.கு. பேச்சாளர் ஹெலன் அறிவிப்பு

யுத்தநிறுத்தஉடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கான நேரடிச் சந்திப்பை ஜெனீவாவில் நடாத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கியிருப்பதனால் தற்போது இரு தரப்பு முறுகல் நிலைமை நீங்கியுள்ள போதிலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இனிமேல்தான் பாரிய பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதெனக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலஸ்டோடித் தெரிவித்துள்ளார்.

'யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகள் முடிவடைந்துவிட்டதாக எவருமே கருதக்கூடாது. எதிர்காலத்தில் பாரிய பொறுப்பு அதன்மீது சுமத்தப் படப்போகிறது' பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நேரடியாகச் சந்தித்துப்பேசுவதற்கு இணங்கியதையடுத்து வடக்கு–கிழக்கில் தற்போது ஓரளவு அமைதி நிலவி வருகிறது.

தற்போது நிலவும் இந்த அமைதி நிலைமையை நிரந்தர சமாதானமாக மாற்றுவது இரு தரப்பினரின் கைகளிலேயே இருக்கிறது எனவும் ஹெலன் தெரிவித்தார்.

கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களுக்கு இராணுவத்தினர் உதவுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் இவ்வாறு கூறப்படுவதில் உண்மையில்லை; இத் தகைய ஆயுதக்குழுக் களுக்கு இராணுவம் உதவுவதற்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. கண் காணிப்புக் குழு மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இ.தொ.க, ம.ம.மு இணைந்து போட்டி

## இருகட்சிகளும் மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் மலையக மக்கள் முன்னணியும் கூட்டாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலைச் சந்திக்க முடிவுசெய்துள்ளது.

ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. குழுவினருக்கும் பெ.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியின் குழுவினருக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை நுவரெலியாவில் நடந்த 2 ஆம் சுற்றுப்பேச்சுகளில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

கொழும்பில் ஜனவரி 26ஆம் திகதியன்று முதல் சுற்றுப் பேச்சுகள் நடந்தன. 'மலையகத்தில் உள்ள அனைத்துக் கட்சி கள் மற்றும் குழுக்களை ஒரே கூட்டமைப்பின் கீழ் ஒன்றிணைக்கவும் வடக்கு–கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்படவும் இரு கட்சிகளும் முடிவுசெய்துள்ளன என்றுபெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இப் பேச்சுக்களின்போது இ.தொ.க: குழுவில் சச்சிதானந்தன், வி.ராதாகிருஸ்ணன், நடராஜ பிள்ளை, துரை மதியுகராஜா ஆகியோரும் மலையக மக்கள் முன்னணியின் குழுவில் லாரன்ஸ், எஸ்.விஜயகுமாரன் சரத் அத்துகோரல, விஜயசந்திரன், இராஜகுலேந்தின் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

இதனிடையே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி மற்றும் மலையக மக்கள் முன்னணியினருடன் உள்ளூராட்சி கூட்டணி தொடர்பாக பேச்சுகளை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தமது கட்சியினரது கருத்தை அறிந்த பின்னரே ஐக்கிய தேசியக்கட்சியின் அணியில் இணைவது தொடர்பாக முடிவெடுக்க இரு கட்சித்தலைவர்களும் முடிவுசெய்துள்ளனர். (த)

# கருணா அணியினரிடமிருந்து ஆயுதங்களை களைந்த பின்பே பேச்சு சாத்தியமாகும்

## ரணில் விக்கிரமசிங்க

கருணா அணியினரிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டால் தான் ஜெனீவாவில் நடக்கவிருக்கின்ற பேச்சு சாத்தியமாகும். என விடுதலைப்புலிகளின் செய்தியை மேற்கோள் காட்டி எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன் தினம் சமன்மன் ஹோட்டலில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத்தை முன்னெடுத்துச்செல்லும் நோக்கே ஜெனீவா பேச்சுவார்த்தையாகும்.

இதற்கு ஐ.தே.கட்சி தனது பூரண ஆதரவை வழங்க தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் கருணா குழுவினர் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச்செல்ல முடியும்.

அதற்கு கருணா குழு இணங்



காது போனால் சமாதானப் பேச்சுவார்த்தை பின்னடைவையே காண நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (க-2)

# சங்காபிஷேகமும் மணவாளக் கோலவிழாவும்

(யாழ்ப்பாணம்)

கச்சேரிநல்லூர்வீதி, பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலய சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.30மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி, அதனுடன்விசேடபூசையும்நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானமும் மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும், திருஊஞ்சலும், அம்பாள் வீதியுலாவும் நடைபெறவுள்ளன. (க-2)

# பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு

திருகோணமலை மூதூர் பச்சலூர் பிரதேசத்திலுள்ள பொலிஸ் காவலரண்மீது நேற்று முன் தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காவலரணில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு சைக்கிள் ஒன்றில் வந்த இனம் தெரியாதோரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸார் கூறுகின்றனர்.

கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை இலக்குவைத்து சந்தேக நபர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாகவும் பொலிஸார் பதில் தாக்குதலை நடத்தியதையடுத்து சந்தேக நபர்கள் தப்பிச்சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வேளை காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சம்பவம் இடம்பெற்றவேளை பச்சலூர் காவலரணில் 20 பொலிஸார் காவலில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பாபிஷேகமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம்கும்பாபிஷேக மலர்வெளியீடும்காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ அரிகர சுப்பிரமணிய குருக்களும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரும் ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் சிறப்புரையை பிரசங்க நாவலர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் வழங்குவார்கள். மலர் வெளியீட்டு முதற்பிரதியை திருமதி கலைவாணி குகதாசன் பெற்றுக்கொள்வார். (க-2)

# இராசி பலன்

01.02.2006
(தை 19, புதன் கிழமை)
திருதியை பிற்பகல் 2.13மணிவரை
சதயம் காலை 06.50மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 5.14வரை
இராகுகாலம் 12.36-2.6மேணிவரை
சுபநேரம் 5.06-06.36 மணிவரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, சுபநிகழ்வு, தொழில் நன்மை, கீர்த்தி. |
| இடபம் | அதிகபிரயாசை, நல்லசெய்தி கல்வியில் ஆர்வம், விருந்துபசாரம். |
| மிதுனம் | புதியதிட்டமிடல் கட்டுப்பாடு காரிய தாமதம் பிரயாணம். |
| கடகம் | காரிய தடாங்கல் உடல்நலக்குறைவு, கலகம் மரியாதைக் குறைவு. |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, நல்ல செய்தி. |
| கன்னி | பிறர் உத்வி, உடல்நலம் காரிய அனுகூலம், போசன சுகம். |
| துலாம் | வியாபாரநன்மை, பணவிரயம், முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு. |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, சுபச்செலவு, முயற்சி கைகூடும், மரியாதைக்குறைவு. |
| தனுசு | போசன சுகம், கூட்டுமுயற்சி, பிரயாணம், நண்பர்கள் உதவி. |
| மகரம் | காாரிய தடங்கல் உடல் நலக்குறைவு, கோப்படல், பிரயாணம். |
| கும்பம் | போசன சுகம், காரியதாமதம், பொருள் சேர்க்கை, சிந்தனை மிகுதி. |
| மீனம் | பணவிரயம், சயனசுகக்குறைவு, காரிய அலைச்சல் , வீண் பகை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# நடைபாதை வியாபாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

பயணிகள் மற்றும் நோயாளர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் சகல வியாபாரிகளும் இன்று முதல் அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும்.

அவ்வாறு நிறுத்தாவிட்டால் அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கும் பொருள் இழப்புக்களுக்கும் நீங்களே பொறுப்பாவீர்கள் என யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் நடைபாதை வியாபரிகளுக்கு அறிவித்துள்ளார்.

நடைபாதை வியாபாரிக ளுக்கு இதுகுறித்து பலமுறை எச்சரித்தும் அவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அத்து மீறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றதாக குறிப்பிட்ட ஆணையாளர்.

அவ்வீதியால் செல்லும் நோயாளர்கள் கர்ப்பிணிப் பெண்கள் இதனால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகச் சுட்டிக்காட்டினார். இந்த நிலை இனிமேலும் தொடர தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஆவர் மேலும் தெரிவித்தார். (க)


கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் - கரவெட்டி
வரையறுக்கப்பட்டது பதிவு இல 1553

பதவி வெற்றிடம்

கிளைமுகாமையாளர்கள் தற்காலிகம் -5 வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. சம்பளம் ஆணைக்குழு விதிகளுக்கமைவாக வழங்கப்படும். கூட்டுறவு அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சேவைத்திறமை, தகுதி, அனுபவம் என்பன அடிப்படையில் காலகெதியில் நிரந்தர நியமனம் வழங்கப்படும். விண்ணப்பங்களை 15.02.2006ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் நேரடியாகவோ தபால் மூலமோ ஒப்படைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு சங்கவேலை நேரத்தில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும், விண்ணப்பங்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் தயாரித்து வழங்கவேண்டும்.

கெ.கெங்காதரன்
பொதுமுகாமையாளர்
கட்டைவேலி.- நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி

(C/185)

# இரயில் தடம் புரண்டதில் 3பேர் பலி; 40பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மலைப் பாதையில் 600 பயணிகளுடன் சென்ற ரயில் ஒன்று தடம்புரண்டு பள்ளத்தாக்கில் விழுந்ததில் மூன்று பேர் பலியாகினர்.

பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட பஞ்சாபின் கிழக்கு பகுதியில் டோமெலி என்ற




இடம் உள்ளது. இங்குள்ள மலைப் பாதையில் ராவல்பிண்டியிலிருந்து அதிவேக ரயில் ஒன்று லாகூர் சென்றுகொண்டிருந்தது.

அப்போது மலைப் பாதையில் ஒரு வளைவில் திரும்பிய ரயில் திடீரென தடம் புரண்டது.

ரயிலின் ஆறு பெட்டிகள் 50அடி பள்ளத்தாக்கில் விழுந்தன. இதில் மூன்று பயணிகள் பலியாயினர். 40பேர் காயம் அடைந்தனர் ரயில் தடம்புரண்டதற்கு நாச வேலை காரணமா என்ற ரீதியில் பாகிஸ்தான் ரயில்வே நிர்வாகம் விசாரித்து வருகிறது. ரயிலை மிகவும் வேகமாகச் செலுத்தி வந்ததும் இந்த விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. விபத்து பகுதியிலிருந்து மற்ற பயணிகள் மீட்கப்பட்டு மாற்று ரயில் மூலம் லாகூருக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும், பிரதமர் சவுகத் அஜீகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.



விபத்தில் காயமடைந்த பயணிகளுக்குத் தேவையான நிவாரண உதவிகள் விரைவில் வழங்கப்படும் என்று அவர்கள் கூறியுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளனர். (கு)



மத்திய அமைச்சர்களாக புதிதாகப் பதவி ஏற்றவர்களுக்கு காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

# பாகிஸ்தானுடன் உறவைப் பேணுவதில் மெத்தனமாக இருக்கிறது இந்தியா

(நியூயோர்க்)

எல்லை தாண்டிய தீவிரவாதம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகளின் வன்முறை தாக்குதல்கள் போன்றவற்றை சாக்கு போக்காக சொல்லி பாகிஸ்தானுடனான உறவில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாமல் இந்தியா மெத்தனமாக உள்ளது என பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் பத்திரிகை ஒன்றுக்கு அதிபர் முஷாரப் அளித்த பேட்டியில் இதுதொடர்பில் கூறுகையில்,

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகள் யாருடைய வழிகாட்டுதலும், ஆதரவும் இன்றி செயல்படுகின்றன. அவை தங்களுடைய இஷ்டம் போல் திட்டங்களைத் தீட்டி செயல்படுகின்றன.

எனவே, இதை சாக்காகக்கொண்டு காஷ்மீரில் உள்ள இந்திய இராணுவத்தினர் ஏராளமானவர்களைக் கொல்கின்றனர். பாகிஸ்தானுடனான உறவை மேம்படுத்தாமல் இருக்க எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் பாகிஸ்தானிலிருந்துசெயல்படும் தீவிரவாதஅமைப்புகளே காரணம் என்று



இந்தியா சாக் குப் போக்கு சொல்கிறது. முதலில் காஷ் மீரிலுள்ள இராணுவத்தை விலக்க வேண்டும் என்றார். (கு)

உலக தரிசனம்

# இந்தியர்களின் தற்கொலை வளைகுடாவில் அதிகரிப்பு

(அபுதாபி)

வளைகுடா பகுதிகளில் இந்திய தொழிலாளர்கள் இடையே தற்கொலை அதிகரித்துவருகிறது. அவர்களின் தற்கொலை எண்ணத்தை அறிந்து அவர்களுக்கு மனோதத்துவ அளவில் ஆலோசனை தர இந்தியா தீவிர முயற்சி எடுத்துவருகிறது.

ஐக்கிய அரபு குடியரசு பகுதிகளில் லட்சக்கணக்கான இந்தியர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். அவர்களில் பலரும் குடும்பத்தை விட்டு விட்டுத்தான் வளைகுடா மண்ணில் அதிக சம்பளத்துக்காக வேல்லை பார்த்து வருகின்றனர். அவர்களின் மனநிலை ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டு தற்கொலை எண்ணம் ஏற்படுகிறது.

கடந்த 2002ஆம் ஆண்டில் 54பேர், 2003இல் 64பேர், 2004இல் 69பேர் தற்கொலை செய்துள்ளனர். கடந்த ஆண்டு 84பேர் தற்கொலை செய்துள்ளனர்.

தற்கொலை செய்தவர்கள் பலரும் பணத்துக்காகத்தான் தற்கொலை செய்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இந்தியாவில் இருந்து ஏஜன்டுகள் மூலம் விசா வாங்கி வந்துவிடுகின்றனர் அவர்கள் தாங்கள் எதிர்பார்த்த அளவில் வேலை கிடைக்காத போது மிகவும் அதிர்ச்சி அடைகின்றனர். இந்தியாவில் வாங்கிய கடன், விசாவுக்கு பணம் என்று ஏகப்பட்ட ஆயிரங்கள் சேர்ந்து விட்டதால் கடனே மனதை அழுத்துகிறது. இதனால் தான் தற்கொலை செய்கின்றனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. (கு)

# பாகிஸ்தானின் பெயரை கெடுக்கிறார் முஷாரப்


## அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஆவேசம்

அதிபர் முஷாரப் தலைமையில் பாகிஸ்தானில் ஜனநாயகம் தோல்வியடைந்துவிட்டது. உலக அரங்கில் பாகிஸ்தானின் பெயர் கெடுவதற்கு முஷாரப்பே காரணம் என அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் 1990லிருந்து 1993 வரையிலும், 1997லிருந்து 1999வரையிலும் பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரீப். இரண்டாவது முறை பிரதமராக இருந்தபோது 1999ல் தற்போதைய அதிபர் முஷாரப் திடீர் இராணுவப் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினார். ஷெரீப்பை சிறையில் அடைந்தார். இதைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு சவுதி அரேபியாவுக்கு நவாஸ் ஷெரீப் நாடு கடத்தப்பட்டார்.

உடல்நலக்கோளாறு காரணமாக லண்டனில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது 28வயது மகன் ஹஸனைக் காண வந்த நவாஸ் ஷெரீப் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் அதிபர் முஷாரப் தலைமையில் பாகிஸ்தானில் ஜனநாயகம் தோல்வி அடைந்துவிட்டது. பாகிஸ்தானை மக்கள் ஆளவேண்டுமா அல்லது முஷாரப் போன்ற இராணுவத்தினர் ஆள வேண்டுமா என்பதை மக்கள் இன்றே முடிவு செய்யவேண்டும்.

உலக அரங்கில் பாகிஸ்தானை மற்றவர்கள் குறைத்து மதிப்பிடும்படி முஷாரப் நடந்து கொள்கிறார். முஷாரப் ஒரு சர்வாதிகாரி. இந்த மாத ஆரம்பத்தில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத்தாக்குதலும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. இந்த தாக்குதலில் 13பேர் உயிரிழந்துள்ளனர். (கு)



பெருநாட்டின் லிமா நகரில் கடும் பனி மூட்டம் காரணமாக துறைமுகத்தில் நுழைந்த பனாமா நாட்டு கப்பல், துறைமுகத்தை விட்டு புறப்பட்ட மற்றொரு கப்பலுடன் மோதியது. பலத்த மோதலின் காரணமாக பனாமா நாட்டு கப்பல் இரண்டாக உடைந்து கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது. இந்த சரக்கு கப்பலில் இருந்த 23 ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு விட்டனர்

# சர்வதேச நாடுகள் பாலஸ்தீனத்திற்கு உதவவேண்டும் -அதிபர் கோரிக்கை

பாலஸ்தீனத்தில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் ஹாமஸ் தீவிரவாதிகள் கட்சி வெற்றிபெற்று ஆட்சியை பிடித்துள்ளது. சர்வதேச நாடுகள் பாலஸ்தீனத்துக்கு அளித்துவந்த உதவிகள் நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக அந்த நாட்டு அதிபர் அப்பாஸ் இஸ்ரேலுடன் தொடர்ந்து அமைதி பேச்சுவார்த்தை நடத்த என் ஆதரவை தெரிவிக்கிறேன். சர்வதேச நாடுகள் பாலஸ்தீனத்துக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனையா இதுபற்றி கூறும்போது சர்வதேச நாடுகள் பாலஸ்தீன மக்களின் ஜனநாயக முடிவை மதித்து நடக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (கு)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

### 36 மீள்பார்வை



எந்தச் சூழ்நிலையிலும், உணர்ச்சிவசப்படாமல், அந்த பாத்திரத்திற்குள் நுழைந்து, சுலபமாக வெளியே வந்து, நடிப்பவன் தான் நடிகன். ஆகையால்தான் நடிகர்களை உணர்ச்சிவசப்படாதீர்கள் என்று நான் கூறுகிறேன்.

டி.எஸ்.என்: நீங்கள் எத்தனையோ படம் நடித்துள்ளீர்கள். பார்க்கிறவர்களுக்கு நீங்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு நடிப்பது போலல்லவா மக்களுக்குத் தெரிகிறது.

சிவாஜி: அப்படி ஏமாற்றுவதுதானே என்னுடைய வேலை. நான் அழுவதுபோல் உங்களை அழவைக்கிறேன் அல்லவா .அப்பொழுது நானா அழுகிறேன்? படத்தில் எனது அம்மா இறந்துவிட்டாள் என்று அழுகிறேன்.

உண்மையிலேயே எனது அம்மாவா இறந்துவிட்டா? இல்லையே அது போல் நடிக்கிறேன். என்னுடைய நடிப்பாற்றலால் நீங்கள் படம் பார்க்கும் போது கண்ணைக் கசக்குகிறீர்கள் . அந்தப் படம் நன்றாக ஓடுகிறது. உதாரணமாக நவராத்திரி படத்தில் நவரசத்தைத் தரும் ஒன்பதுவிதமான பாவங்களை வெளிப்படுத்தும் பாத்திரங்களை நடித்தேன்.



தங்கப்பதுமை படத்தில் டி.ஆர். ராஜகுமாரி, என்.எஸ்.கிருஷ்ணனுடன்....(1959)

சாந்தம், சோகம், கோபம், வீரம், பயம், அருவெறுப்பு இப்படி நவரச பாவங்களை காட்டும் வித்தியாசமான பாத்திரங்களை நடிக்கும்போது நான் உணர்ச்சிவசப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஆகையால்தான் மீண்டும் நடிகர்களுக்குச் சொல்கிறேன் நடிக்கும்போது உணர்ச்சி வசப்படாதீர்கள் என்று .

#### நகைச்சுவை நடிப்பு

டி.எஸ்.என்:இவர் ஹீரோ,இவர் காமெடியன், இவர் பாடகன், இவர் வில்லன், இவர் ஸ்டண்ட் ஹீரோ என்றெல்லாம் பிரித்து முத்திரை குத்தியிருந்த காலத்தில் நீங்கள் கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற முழு நீள நகைச்சுவைப் படத்தில் காமெடியனாக நகைச்சுவை மிளிர நடித்தீர்கள். அந்த கேரக்டரை நடிக்க எப்படி சம்மதித்தீர்கள்? அந்த படத்திற்காக உங்களை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்?

சிவாஜி: அந்த படத்தை ப.நீலகண்டன் டைரக்ட் செய்தார். பி.ஆர். பந்துலு தயாரித்தார். அது ஒரு மராட்டிய சப்ஜெக்ட். அதில் நான் நடித்தேன். அதாவது ஆபாசமே இல்லாமல் காமெடி இருக்கவேண்டும் என்பதை மையமாகக் கொண்டு எடுத்தபடம் அது. நான் அதில் நடிக்க வேண்டும் என்றார்கள். ப.நீலகண்டன் அவர்களை எனக்குச் சின்ன வயதிலிருந்தே தெரியும்.

அவர் ஏ.வி.எம். ஸ்டுடியோவில் இருந்தவர் .நான் பராசக்தி படம் நடிக்கப் போனபோது ஸ்திரிபார்ட் காரனையெல்லாம் ஏன் உள்ளே கொண்டு வந்தீர்கள்?என்று கூறியவர் அவர்தான். அவரே என்னிடம் வந்து நீங்கள் என் படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்டால் யாருக்கு வெற்றி? எனக்குத்தானே வெற்றி. ஆகையால் நான் நடித்தேன். என்.எஸ்.கே அவர்கள் இருக்கும் பொழுது நல்ல காமெடிஉண்டானது. அவர் பேசப்பேச நாம் சிரித்துக்கொண்டே இருப்போம். ரெக்கார்டில் வைக்க வேண்டுமென்றால் கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி போன்ற காமெடிகளைத்தான் வைக்கவேண்டும். அது ஒரு கிளாசிக் காமெடி என்று சொல்லலாம். நடிப்பு என் தொழில். அதில் நகைச்சுவையும் ஒரு பகுதிதானே. ஆகவே நடித்தேன். என்னால் அது முடியுமென்று தெரிந்ததால்தானே என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். தொடர்ந்து சபாஷ்மீனா படம் வந்தது. அதுவும் காமெடி படம்தான். நானும் சந்திரபாபுவும் நடித்தோம். அவர் நல்ல காமெடியன். இந்தக் காலத்தில் கூட அவர் போல பாடி ஆடுகிறார்கள். அவர் அதையெல்லாம் ஏற்கனவே செய்துவிட்டார். அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் மனம்குளிரச் சிரித்தார்கள்.



பதிபக்தி படத்தில் எம்.என்.ராஜத்துடன்...(1958)

#### நானும் பாடுவேன்

டி.எஸ்.என். கிராமிய மெட்டில் அந்தக் காலத்தில் முதன் முதலில் பல பாடல்களைப் பாடி ஜனரஞ்சகமான ஒரு படம் நடித்தீர்கள் அல்லவா?

சிவாஜி: நீங்கள் சொல்வது தூக்கு தூக்கி படம்தானே?நீங்கள் சொன்னவுடன் எனக்கு ஞாபகம் வந்துவிட்டது.கொண்டுவந்தால் தந்தை, கொண்டு வந்தாலும், வராவிட்டாலும் தாய், சீர்கொண்டு வந்தால் சகோதரி, கொலையும் செய்வாள் பத்தினி, உயிர் காப்பான் தோழன் இதைக் கருவாக வைத்துக் கொண்டு தூக்குத் தூக்கி கதையை முதலில் நாடகமாக நடத்தினார்கள். அதைத்தான் பிறகு படமாக எடுத்தார்கள். அதில் பாடலுக்குத் தான் முக்கியத்துவம். லலிதா, பத்மினி, பாலையா போன்றவர்கள் நடித்துள்ளார்கள். நானும் நடித்துள்ளேன். அந்த படத்தில் ஹீரோவே பாட்டுத்தான். கிராமங்களில் எல்லாம் ஒரு வருடம் இரண்டு வருடம் அந்த பாடல்கள்தான் ஒலித்துக்கொண்டே இருந்தன. ஆகையால் தூக்குத்தூக்கி படம் ஒரு அருமையானபடம். இந்தப் படத்தில்தான் டி.எம். சௌந் தர்ரா ஜன் அவர்கள் எனக்காக எழுதப்பட்ட பாடல்களை முதன்முதலில் பாடினார். அதில் உள்ள பாடல் களைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். சலிப்பே இருக்காது. அந்த இசை கலந்த படத்தில் நானும் இருந் தேன் என்ற பெருமையேயொழிய அதில் உள்ள பாடலுக்குத்தான் எல்லாப் பெருமையும் சேரும்.



அன்னையின் ஆணை படத்தில் சாவித்திரியுடன்...

(தொடரும்)

# கிழக்கிலிருக்கும் புலிகளுக்கு கடல் மார்க்கமாக ஆயுதங்கள்

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கிலிருக்கும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு கடல்மார்க்கமாக ஆயுதங்கள் கொண்டு வரப்படுவதற்கான திட்டம் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் இதனையடுத்து கிழக்கின் கரையோரப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு நாளேடு ஒன்று செய்திவெளியிட்டுள்ளது

அச்செய்தியில் ,கிழக்கிலிருக்கும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் தற்போது பெரும்ஆயுதப்பற்றாக்குறைக்கு முகம் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது .

அதனால் ஆயுதங்களைக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து ஆயுதங்கள் கொண்டு வரப்படக் கூடிய இடங்களில் பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். தங் களின் ஆயுதப் பற்றாக்குறை தொடர்பில் கிழக்கிலிருக்கும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தகவல் பரிமாறல் கருவியினூ பாக அறிவித்ததைப் பாதுகாப்புப்படையினர் செவிமடுத்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கடற்படை அதிகாரிகள் 8பேருக்கு இடமாற்றம்

(திருகோணமலை)

மன்னார் பிரதேசத்தின் கடற்படை கட்டளையதிகாரியாகப் பணியாற்றிய கொமாண்டர் நிஹால் சந்திரசிறி எதிர்வரும் 5ஆம் திகதி முதல் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொமாண்டர் நிஹால் சந்திர சிறி தவிர மேலும் 4 கட்டளையதிகாரிகள் உட்பட 8 கடற்படை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தலைமையக வட்டாரத்த கவல்கள் தெரிவிக்கின்றன.

கொமாண்டர் டபிள்யு எச்.சுமனசிறி பூணாவ முகாமிற்கும், கொமாண்டர் ஜீ.எச்.எதிரிவீர மற்றும் கொமாண் டர் கே.எல்.டி. நிசாந்த ஊர்காவற்றுறை கடற்படை முகாமிற்கும், கொமாண்டர் டபிள்யு.எஸ்.ஏ.கே. சில்வா பூணாவ முகாமின் உதவி கட் ளையதிகாரி பயிற்சி பதவிக்கும், லெப்டினன் கொமாண்டர் எல்.லியனாரச்சி, லெப்டினன் ஐ.எஸ்.கருணநாயக்க ஆகியோர் திருகோணமலைக்கும் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளனர்.

இந்த 8அதிகாரிகளினதும் இடமாற்றங்கள் வருடாந்தம் இடம் பெறும் இடமாற்றங்களுக்கு ஏற்ப நடைபெறும் என்றும் இது வழமை யானது என்றும் கடற்படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க)

# அதியுயர் ஜொனியன் ஈகிள் விருது

(சுண்டுக்குளி)

கடந்த வருடம் நடைபெற்ற பாடசாலைகள் தேசிய மெய்வல்லுனர் நிகழ்வில் 17 வயதிற்குட் பட்டோர் பிரிவில் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் 15.12 செக்கன் நேரத்தில் ஓடி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய விருதையும் பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தியாகராஜா தர்சன் கல்லூரியின் அதியுயர் விருதான ஜொனியன் ஈகிள் விருதைப் பெற்றுள்ளார்.

இவ் விருது 21வருடங்களுக்கு பின்பு மீண்டும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன் 1972ஆம் ஆண்டு சு. அன்ரனிப்பிள்ளை தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்றமையாலும், 1984ஆம் ஆண்டு ப.திருக்குமார் கிரிக்கெற்றில் கனிஷ்ட தேசிய அணியில் இடம்பெற்றமையாலும் இவ்விருதைப் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-110)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்— வேட்பாளர் சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் சபை மற்றும் அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தவின் அலரிமாளிகையில் இன்று மாலை 7.30 மணிக்கு இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வது தொடர்பான பணிகளை வேட்பாளர் சபை ஏற்கனவே நிறைவு செய்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பாக இந்த சந்திப்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# ஜெனீவாப் பேச்சுக்களில் ஹெல்கீஸன் பங்கேற்பார்?

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது நோர்வேயின் சிறப்புத்தூதுவராக முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சராக இருப்பதால் அவர் இப்பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் அவருக்கு பதிலாக விடார் ஹெல்கீஸன் கலந்துகொள்வார் என்றும் கூறப்படுகின்றது.

இச்சந்திப்பில் கலந்துகொள்ளும் இரு தரப்பினருக்குமிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 04

ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - II நேரம்:1 மணி 15 நிமிடம்


**01. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்து (1- 10) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

வண்ண வண்ணப் பூக்கள், வடிவான பூக்கள்
வாணி வீட்டு முற்றத்தில், பூத்திருக்கும் பூக்கள்
பல வர்ண நிறத்தில், செவ்வரத்தம் பூக்கள்
பட்டுப் போல றோசா, எட்டிப் பார்க்கும் எக்சோறா
பாதையோரம் நின்றே, பளபளக்கும் குறோட்டன்
பந்தல் மேலே படர்ந்தே, மணம் வீசும் மல்லிகை
நித்தியகல்யாணியுடனே, பல விதமாய்ச் செவ்வந்தி
எம்மைக் கிட்ட அழைத்தே, கலகலவென்று சிரிக்கும்

01. பாடலிலுள்ள வெள்ளை நிறப் பூக்கள் 1. .................... 2. ....................
02. பூவுக்காக இல்லாமல் அழகுக்காக நடுவது ....................
03. வாணி தவிர்ந்த இரண்டு பெண்களின் பெயர் 1. .................... 2. ....................
04. சில நாட்களுக்கு வாடாமலிருக்கும் பூ ....................
05. தலையிலே அழகுக்காகச் சூடும் பூ ....................
06. இரவிலே வாசனை வீசும் பூ ....................
07. பாடலில் வரும் இரட்டைக்கிளவி ஒன்று ....................


**02. சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.**

08. பூஞ்செடிகளை வளர்ப்பது - அழகுக்காக / பொழுதுபோக்குக்காக
09. தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் - பேராதனை / நீர்கொழும்பு
10. பூக்களின் அழகை - சுவைக்கலாம் / ரசிக்கலாம்



11. டீன்ஸ் குற்றிகள் குறிப்பிடும் எண் யாது?
------------------------------

12. ஒரு சிறிய குற்றியை விட தட்டு எத்தனை மடங்கு கூடியது?
------------------------------




13. இவ்வுருவில் வரையக்கூடிய மிகப் பெரிய சதுரத்தை நிறம் தீட்டுக?

14. இவ்வுருவில் உள்ள கட்டங்கள் எத்தனை?
------------------------------

15. செங்கோண வடிவில் அமைந்துள்ள தமிழ் எழுத்து ஒன்றை எழுதுக?
------------------------------

**03. கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தினை அவதானித்து 16-20 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**



16. கோப்பையின் வடக்குத் திசையில் ---------------- உள்ளது.
17. நாயின் ---------------- தென்னை நிற்கிறது.
18. காவலாளியின் ---------------- கிணறு உள்ளது.
19. டோச்லைற் சைக்கிளின் ---------------- உள்ளது.
20. புறாவின் வடக்கிலும் தென்னையின் கிழக்கிலும் ---------------- உள்ளது.

**04. கட்டங்களிலுள்ள சொற்களிலிருந்து இடைவெளியை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| மணல் மண் | வண்டல் மண் | களி மண் |

21. நீரை அதிகளவு வைத்திருக்கும் மண் ------------------------
22. விரைவாக காற்று உட்புகக்கூடிய மண் ------------------------
23. பயிர்ச் செய்கைக்கு உகந்த மண் ------------------------

**05. தரப்பட்ட அட்டவணையிலிருந்து பொருத்தமான பூச்சிகளின் பெயரைத் தெரிவு செய்து எழுதுக.**

குளவி, வண்ணத்துப்பூச்சி, அந்துப்பூச்சி, சிலந்தி, கும்பிடு பூச்சி, வண்டு, ஈ, தும்பி, எறும்பு, நுளம்பு





24. ------------- 25. ------------- 26. -------------





27. ------------- 28. ------------- 29. -------------

**06. 30-35 வரையான வினாக்களுக்கு சரியாயின் (சரி) எனவும் பிழை யாயின் (பிழை) எனவும் எழுதுக.**

30. மஞ்சு விரட்டு என்பது கிராமிய விளையாட்டாகும். ( )
31. இலங்கையின் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆவார். ( )
32. இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள நாடு இந்தியா. ( )
33. தீக்கோழி வேகமாக ஓடக்கூடிய பறவையாகும். ( )
34. இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா. ( )
35. இலங்கையில் 25 மாகாணங்கள் உண்டு. ( )

**07. 36 - 38 வரையான வினாக்களில் இரு வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன அவற்றைத் தனி வாக்கியமாக எழுதுக.**

36. சிறுவன் கழுதையில் ஏறிச் சென்றான்.
தாத்தா நடந்து சென்றார்.
------------------------------------------------

37. தாய்க் குருவியைக் குஞ்சுகள் கண்டன.
குஞ்சுகள் மகிழ்ச்சியால் கீச்சிட்டன.
------------------------------------------------

38. பானையில் பால் பொங்கியது.
அப்பா அரிசியைப் போட்டார்.
------------------------------------------------

**08. பழமொழிகளின் இடைவெளிகளை நிரப்புக.**

39. தை பிறந்தால் ------------------------------------
40. அடம்பன் கொடியும் ------------------------------------

**09. கீழே சில நகரங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழில் எழுதுக.**

41. JAFFNA --------------- 42. TRINCOMALAE ---------------
43. GALLE --------------- 44. COLOMBO ---------------

**10. கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களைத் தமிழ் வடிவத்தில் எழுதுக.**

45. ஆயுபோவன் --------------- 46. மல் ---------------
47. அம்ப --------------- 48. இர ---------------

**11. தற்போது வீதி விபத்துக்கள் அதிகளவில் நிகழ்கின்றன. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. பின்வருவன தொடர்பாக ஒவ்வொரு காரணம் எழுதுக.**

49. வாகனச் சாரதி ------------------------
50. பாதசாரி ------------------------
51. வாகனம் ------------------------
52. வீதிகள் ------------------------

**12. சுருக்கமான விடை தருக.**

53. இலங்கையின் தேசிய மரம் --------------------
54. தாவரங்களின் வளர்ச்சிக்கு அவசியமானது --------------------

**13. (வினா இல 55 - 60)**

**கீழே ஒரு கதையின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. அதை வாசித்து கதையின் மறு பகுதியை உமது கற்பனையில் எழுதுக.**

ஓர் அரசன் குரங்கு ஒன்றிடம் தனது வாளைக் கொடுத்தான். தனக்கு அருகிலிருந்து தான் நித்திரையால் எழும்பும்வரை தன்னைக் காவல் செய்யுமாறு கூறினான். அவன் நித்திரையாகிய பின் வீட்டு ஈ ஒன்று அவனது வயிற்றின் மேல் இருந்தது. அதைக் குரங்கு கண்டது...

55. ------------------------------------------------
56. ------------------------------------------------
57. ------------------------------------------------
58. ------------------------------------------------
59. ------------------------------------------------
60. ------------------------------------------------

நமது சமூகத்தில் நிலவிவரும் குறைபாடுகள் நீங்க வேண்டுமெனில் நாம் எல்லோரும் ஒரு குலம் என்கின்ற உணர்வு ஏற்படவேண்டும்.

-ராதாகிருஷ்ணன்

வலம்புரி

## அமெரிக்காவை அதட்டிய தமிழினத்தின் குரல்

ஈழத்தமிழ் மக்களை மிரட்டும் வகையில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஆற்றிய உரைக்கு எதிராக தமிழ் நாட்டில் கண்டனக்கூட்டமும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றுள்ளது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதில்,அமெரிக்காவின் நாசகாரம் அன்று முதல் இன்று வரை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக கருத்து வெளியிடும் அமெரிக்காவின் உள்நோக்கம் உணர்வு பூர்வமானதல்ல.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எதிர்ப்பதன் மூலமாக தனது ஆயுதங்களை இலங்கை அரசுக்கு விற்று இலாபம் ஈட்டலாம் என்பதே அமெரிக்காவின் நோக்கம்.

இதனை உணர்ந்து கொள்ளாத இலங்கையரசு அமெரிக்காவின் வர்த்தக தந்திரத்திற்குள் சிக்குண்டு அந்த நாட்டின் பழுதடைந்த ஆயுதங்களுக்காக ஏகப்பட்ட பணத்தை செலவிட்டு வருகின்றது.

இவ் விதம் அமெரிக்காவின் கபடநோக்கை நிறைவேற்றுவதில் சிங்கள அரசியல்வாதிகள் சிலரும் பக்க துணையாக இருக்கிறார்கள் என்ற உண்மையையும் உதறித்தள்ளிவிடுவதற்கில்லை.

இதன் அடிப்படையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்களாக இருந்த எவருமே இதுவரை தமிழ் மக்களின் உரிமை,சுதந்திரம் பற்றி சந்தித்தது கிடையாது.

ஆக விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக கருத்தை வெளியிடும் போதுமட்டும் சம்பிரதாய பூர்வமாக தமிழர்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாணப்படவேண்டுமென்ற வாசகம் விருப்பற்று குறிப்பிடப்படுகின்றது.

ஒரு முறை யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் நிகழ்வொன்றுக்கு வருகை தந்திருந்த அமெரிக்கத்தூதுவர் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை கொச்சப்படுத்தும் வகையில் உரையாற்றியதை இலகுவில் மறந்து விட முடியாது.

இலங்கைக்கு ஆயுத விற்பனையை செய்வதுடன் இந்துமா சமுத்திரத்தில் ஆழக்கால் பதிப்பதற்காகவும் ஈழத்தமிழர்களுக்கு எதிராக குரல்கொடுத்து அரசின் ஆதரவைப்பெறுவது அமெரிக்காவின் திட்டமாக இருந்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே ஈழத்தமிழர்களை அதட்டும் வகையிலான அமெரிக்கத்தூதுவரின் உரை அமைந்திருந்தது. எனினும் தமிழர்கள் தனித்தவர்கள் அல்ல. அவர்கள் ஒற்றுமையானவர்கள் பலம்பொருந்தியவர்கள் ஈழத்தமிழர்களின் உடன்பிறப்புக்களாகிய நாம் தமிழகத்தில் இருக்கின்றோம் என்பதை உலகிற்கு பறைசாற்றுவதாக அமெரிக்கத்தூதுவருக்கு எதிராக தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம், பேரணிகள் கண்டனக்கூட்டம் என்பன நடந்துள்ளன.

இந்த அடியொன்றே போதும் அமெரிக்காவுக்கும் அமெரிக்காவின் வாலைப் பிடித்து நிற்கும் இலங்கை அரசுக்கும்.

# இயல்புநிலை திரும்ப இராணுவம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இணங்கிய பின்பும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்முறைகள் தொடர்கின்றன. இராணுவத்தினர் தொடர்ந்தும் மக்கள் மீதான வன்முறைகளைத் தொடர்ந்த வண்ணமேயுள்ளனர்.இதனால் வடக்கு-கிழக்கில் இயல்பு நிலை பாதிக்கப்படுகின்றது என யாழ். மாவட்டம்,உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் மீதான தொடரும் இராணுவ காடைத்தனங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதனத்திற்கான ஒரு சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்கி அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டி சமாதானத்தின் மீது அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இராணுவமானது தமிழ் மக்கள் மீதான வன்முறைகளைத் தொடர்ந்தவண்ணமே உள்ளது.

கண்டிவீதியால் பயணம் மேற்கொள்ளும் அப்பாவி மக்கள் மீது படையினர் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். கடந்த மாதம் 25ஆம் திகதியன்று பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இதுபோன்ற நிகழ்வுகள் சமாதானம் மீது எமது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைப்பதாக அமைகின்றது.

அதாவது பேச்சுக்காக இருதரப்பும் ஓர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திய பின்னர் இராணுவம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான இத்தகைய செயற்பாடுகள் எம் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையே ஏற்படுத்தியுள்ளது.

எனவே உடனடியாக இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தி ஓர் இயல்பான சூழலை உருவாக்க இராணுவம் முன்வரவேண்டும் என வேண்டுகின்றோம்.

சமாதானம் சமாதானம் என்று ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்கும் போது இராணுவம் தமது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டிருப்பது, தென்னிலங்கையானது தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே கபட நோக்கிலான செயற்பாடுகளை நிறுத்தி உண்மையான உறுதியான சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் ஏற்படுத்துவதற்கான நடவடிகைகளை முன்னெடுக்கவேண்டும் என வேண்டுகின்றோம் என்றுள்ளது. (கு)

# சர்வதேச நிறுவனங்கள் வெளியேற்றம் வீடமைப்பு நடவடிக்கை பின்னடைவு

(கொழும்பு)

ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வீடமைப்புத்திட்டங்களை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்துகொண்ட சர்வதேச நிறுவனங்கள் பலவும் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால் வீடமைப்பில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியால் அண்மையில் அமைக்கப்பட்ட புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான குழு இந்தத் தகவலை வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலையால் இலங்கை முழுவதும் சுமார் 98 ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருந்தன. அவற்றைப் புனரமைப்பதற்கு சர்வதேச நாடுகள் வேண்டிய நிதிகளை வழங்கியிருந்தன.

அவற்றில் கடந்த மாத்திற்குள் 90 சதவீதமான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்துங்கள் கைச்சாத்திடப்பட்டு அதற்கான நிதியும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக யுத்தம் ஏற்படலாம் என அஞ்சி பெரும்பாலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பணிகளை இடை நடுவில் கைவிட்டு வெளியேறியுள்ளன.

இதனால் வீடமைப்புப் பணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இதுவரை 20 ஆயிரம் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வீடுகளை அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்திருந்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தோர் மனிதாபிமான ரீதியில் அந்த வீடுகளை அமைக்க முன்வந்தாலேயே வீடமைப்புப் பணிகள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஸ்ரப், பெரும்பாலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நிரந்தர வீடமைப்புப் பணிகளை இடைநிறுத்தி நாட்டை விட்டு வெளியேறியுள்ளன என ஏற்கனவே கருத்து வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இராணுவ கெடுபிடிகள் தொடர்ந்தால் சமாதானத்தை முன்னெடுக்க முடியாது

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கமும்,தமிழீழ விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ள நிலையில், இராணுவம் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் வன்முறைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசும் விடுதலைப் .புலிகளும் மேற்கொள்ள முடியாது போய் விடும் என தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் எச்சரித்துள்ளது. இது தொடர்பாக அறிக்கையொன்றினையும் விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஒரு புறம் சமாதானம் என்று அரசு கூறிக்கொண்டிருக்க, மறுபுறம் சமாதானச் செயற்பாட்டிற்கு குந்தகம் ஏற்படுத்தும் முகாமாக, இராணுவம் திட்டமிட்டு மக்கள் மீது வன்முறைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றினை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசிடம் வேண்டுகின்றோம். இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கு நீதி யானதும் நிரந்தரமானதுமான தீர்வினை ஏற்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுக்கான இடமும் இணக்கமும் காணப்பட்ட நிலையிலும் கூட இராணுவம் தனது இராணுவ அராஜகத்தை அரங்கேற்றி வருவது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் கண்டிவீதியில் பயணம் செய்த மக்கள் மீது இராணுவம் பல கெடுபிடிகளை மேற்கொண்டது. கடந்த மாதம் 28ஆம் திகதியன்றும் ஊர்காவற்றுறையில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். இத்தகைய செயற்பாடுகள் இராணுவத்தினது தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை குறையப்போவதில்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றது.

பேச்சுக்கான புறநிலை அதாவது எமது மக்களின் வாழ்வில் ஒரு இயல்பு நிலையை தோற்றுவிக்கவேண்டிய நிலையில் மாறாக இராணுவம் எமது மக்களின் மீதான அடக்கு முறைகளையே அதிகரித்து வருகின்றது.

இராணுவத்தினருடைய இத்தகைய செயற்பாடுகளானது மீண்டும் ஒரு போரை ஏற்படுத்துவதற்கான செயற்பாடகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான இராணுவக்கெடுபிடிகள் சமாதான முன்னெடுப்புகளுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தப்போவதில்லை என்பதனை எமது மக்கள் நன்கறிவர்.

எனவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த இராணுவ வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் .அவ்வாறு ஓர் இயல்பு நிலையை ஏற்படுத்துவதன் மூலமே சமாதானம் மீதான நம்பிக்கையை உருவாக்க இயலும் என்பது வெளிப்படையான உண்மையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உன்னை இகழும் மக்களை நீ வாழ்த்து. அவர்கள் உனக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொள. உனக்குத் தீங்கு செய்பவர்கள் தங்களுக்குத் தாஙகளே தீங்கு விளைவித்துக் கொள்கிறார்கள். உன்னை வெறுகதும் மக்களிடம் நீ செல். உன்னிடம் இருக்கும் அகந்தையை அவர்கள் அடித்துத் துரத்தட்டும். அது உன்னை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சுவாமி விவேகானந்தர்

# புலிகளை ஜனாதிபதி பேச அழைத்தமை அரசின் பலவீனமாகக் கருதாதீர்கள்

## இப்படிக் கூறுகின்றார் வீரவன்ச

(கொழும்பு)

தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என நேற்று நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இரண்டாவது தேசிய மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற இவ் மாநாட்டில் உரையாற்றிய இயக்கத்தின் இணைத் தலைவரும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ;

விடுதலைப்புலிகள் மற்றும் சர்வதேச சமூகத்தினைவிட பயங்கரவாத அமைப்பொன்று எமது நாட்டில் இயங்கி வருகின்றது.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான இணையத்தின் தலைவர் குமார்ரூபசிங்க போன்றோரே அவர்களாவர்.

இவர்களினாலேயே விடுதலைப் புலிகள் தற்போது மென்மேலும் வளர்ச்சி அடைந்து வருகின்றனர்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி வந்த விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஜெனீவாவில் பேசுவதற்கு இணங்கிவந்திருக்கின்றார்.

இதுவே எமது நல்ல தருணமாகும். அவர்களின் ஆயுதங்களைக் களைந்து தொடர்ந்து பேச்சு மேசையில் வைப்பதே அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி பேச்சு மேசைக்கு விடுதலைப்புலிகளை அழைத்திருப்பது எமது பலவீனம் என யாரும் நினைத்து விடாதீர்கள். பேச்சுவார்த்தையைத் தவிர யுத்தம் என்றால் நாமும் தயாராகவே இருக்கின்றோம் என வீரவன்ச தெரிவித்தார். (ச-4)

## வலி. மேற்குப் பகுதியில் நேற்று தீவிர சோதனை

(பொன்னாலை)

வலிகாமம் மேற்குப் பகுதியில் நேற்று இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், மாவடி, சித்தன்கேணி, சங்கானை மற்றும் நவாலி வீதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வாகனச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் வழிமறிக்கப்பட்டு தீவிர உடல் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. (ச-49)

## துப்பாக்கிச் சூட்டில் கான்ஸ்டபிள் காயம்

திருகோணமலையில் இனந்தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ரஞ்சித் ரட்ணநாயக்க (வயது-30)படுகாயமடைந்துள்ளார்.

மூதூரில் பாச்சனூர் பொலிஸ் நிலையத்தில் பணியிலிருந்த கான்ஸ்டபிள் ரஞ்சித் ரட்ணநாயக்கா மீது நேற்றுக் காலை 5.30 மணிக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இவர் திருகோணமலை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறிலங்கா காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். இ

# இரவு நேர அம்புலன்ஸ் சேவை பெற தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவு நேரங்களில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு சுகாதாரசேவைகள் திணைக்களத்தால் அம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இரவு நேரங்களில் நோயாளர்களை தனியார் வாகனங்களில் கொண்டு செல்வது பாதுகாப்பற்றதாக காணப்படுவதாக மக்கள் தெரிவித்ததையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பாதுகாப்பு தலைமையலுவலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற இவ்வனுமதிக்கிணங்க இரவு நேரத்தில் மட்டும் வீடுகளுக்குச் சென்று நோயாளர்களை ஏற்றிவர அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமக்கு அண்மையில் உள்ள வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையைப் பெறமுடியும்.

மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை-226 3530, மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி-222 8479, சுற்றயல் கூறு சங்கானை- 222 5477, மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை-0602212614, மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை- 0602213580, சுற்றயல் கூறு காரைநகர்-222 5556, கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை- 0602213582, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை- 226 3261, ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை-226 3262, கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி- 0602213580, கிராமிய வைத்தியசாலை வேலணை-0602213570, சுற்றியல் கூறு அச்சுவேலி-226 3152

(இது தொடர்பான மற்றொரு செய்தி உள்ளே) (ச)

# சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் சபை ,உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் நாளைய தினம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ள இச் சந்திப்பில் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படக்கூடிய மீளமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் பற்றிய ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

உலக வங்கியின் பீற்றர் ஹெறால்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அலெச்சான்டரோ பையோ, ஐ.நா. சபை ஒருங்கிணைப்பாளர் ஜெஃப் டீஃட்டிக் சர்வதேச நிதியத்தின் லூயிஸ் வல்டிவிஜசோ ஆகியோர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்திக்கின்றனர்.

ஆழிப்பேரலை மீளமைப்பு மற்றும் புனர்வாழ்வுப்பணிகள் தொடர்பிலும் இச் சந்திப்பில் விவாதிக்கப்படும் என்று கிளிநொச்சி செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-4)

## கடத்தப்பட்டவர்களை...

உறுப்பினர்கள் உட்பட இலங்கையின் சமாதான நடவடிக்கையுடன் தொடர்புடையவர்களுடன் தொடர்பு கொண்டு இவ்விடயத்தினை அறிவித்துள்ளோம்.

மேலும் கடத்தப்பட்டு காணாமல் போன தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை கண்டறியுமாறும் அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கோரியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-4)

## ரி.ஆர்.ஓ. பணியாளர்கள்...

இதேவேளை றொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு விடுதலைப்புலிகளின் ஊடக பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் அளித்துள்ள செவ்வியில்;

ஜெனீவாவில் பெப்பிரவரியில் நடைபெறவுள்ள யுத்தநிறுத்த ஒப்பந்த அமுலாக்கப் பேச்சுக்கான சூழலை இச் சம்பவம் பாதிக்கக் கூடும். மக்கள் மத்தியில் இது கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள். இராணுவத்தினரோ அல்லது அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவ ஆயுதக் குழுவினரோ கடத்தலில் ஈடுபட்டிருக்கக் கூடும் என தயா மாஸ்டர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவித தகவல்களும் தெரியாது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பிலிருந்து வவுனியாவுக்கு வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 15 பேரை வெலிக்கந்தையடியில் வழிமறித்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவர்களில் ஐவரை நேற்று முன்தினம் பலவந்தமாக கடத்திச் சென்றனர்.

வெலிக்கந்தையில் உள்ள இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் வாகனம் ஒன்றில் வந்த ஆயுதம் தரித்த கடத்தல்காரர்கள், பணியாளர்கள் பயணித்த வாகனத்தின் குறுக்காக தங்களது வாகனத்தை நிறுத்தி ஐவரையும் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## தமிழர் புனர்வாழ்வுக்...

என்று கொழும்பு புனர்வாழ்வுக் கழகத் தலைமையகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணியளவில் மட்டக்களப்பு வாழைச்சேனையில் இருந்து இக் குழுவினர் புறப்பட்டுள்ளனர். அதன் பின்னர் அக் குழுவினர் தொடர்பான எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என புனர்வாழ்வுக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் நேற்று முன்தினம் புனர்வாழ்வுக் கழகத்தின் 5 ஊழியர்கள் ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்டது தெரிந்ததே. (ச)

## சமாதானப் பேச்சு...

நடவடிக்கை எடுக்கப்படும். பேச்சுக்கள் பலன் தரப்படுமானால் வடக்கு கிழக்கில் அமைதியான சூழ்நிலை நிலவுவது அவசியமாகும்.

இப் பேச்சுவார்த்தைகளில் இடம்பெறுவோர் பற்றிய விபரங்கள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. எனினும் முன்னைய சுற்றுப் பேச்சுவார்த்தைகளைப்போன்று வெளிநாட்டு ஆலோசகர்கள் இடம்பெறமாட்டார்கள். பேச்சுவார்த்தைகள் இம்மாதம் நடுப்பகுதிக்குள் இடைப்பட்ட காலப் பகுதியில் ஆரம்பமாகும்.

முதல் சுற்று யுத்தநிறுத்தம் பற்றி கவனம் செலுத்தப்படும். முன்னைய சுற்றுக்களில் விளைந்த மாற்றங்களின் அடிப்படையில் அடுத்தடுத்து சுற்றுக்கள் வடிவமைக்கப்படும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-4)




**உடன் தேவை**

பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள்

(ஆண், பெண் இருபாலாரும்)

யாழ்.நகரமையத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி;
நிர்வாக உத்தியோகஸ்தர்

**குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு**



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத்தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம்

T.P: 0777- 903090
0777-246117
077-9172730










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 01.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.